Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.STC.347/2024 Dw-1**

Name : உண்மைவிளம்பி
Father / Husband name : மனுவேல்
Village : திண்டிவனம்
Age : 80
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 20.01.2026

Complainant present. Both side counsel present.

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கில் எதிரி ஆவேன். புகார்தாரர் தாஸ் எங்கள் குடும்பத்திற்கு டிரைவராக வேலை செய்துவந்தார். புகார்தாரர் எங்கள் வீட்டிற்கு அருகில் குடியிருந்தார். எனது காசோலை புகார்தாரரிடம் எப்படி சென்றது என்று எனக்கு தெரியாது. இதுகுறித்து நான் 2023 ம் ஆண்டு திண்டிவனம் கிளை ஸ்டேட் பேங்கில் காசோலை தொலைந்துவிட்டதாக மனு கொடுத்தேன். 10.12.2023 தேதியிட்ட வங்கிக்கு அனுப்பட்ட மேற்படி மனுவின் நகல் **எ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி மனுவை ரிஜிஸ்டர் போஸ்ட் மூலம் அனுப்பினேன். எனக்கு அஞ்சலக ஒப்புதல் அட்டை கிடைக்கப்பெற்றப்பட்டது. அதனை நான் தாக்கல் செய்துள்ளேன். அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் **எ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் இதுசம்மந்தமாக புகார்தாரருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். அந்த 29.09.2025 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **எ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதனை புகார்தாரர் வாங்கிக்கொள்ளாமல் திரும்ப வந்துவிட்டது. திருப்பட்ட அறிவிப்பு கவருடன் அசல் **எ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் புகார்தாரரிடம் நான் ரூ.5,00,000/- கடன் வாங்கி காசோலை கொடுத்ததாக பொய்யாக வழக்கு பதிவு செய்துள்ளார். நான் புகார்தாரரிடம் கடன் வாங்கவில்லை, புகார்தாரரிடம் நான் காசோலை

கொடுக்கவில்லை, கையொப்பமும் செய்யவில்லை. புகாரை தள்ளுபடி செய்யவேண்டுகிறேன்.

**புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

புகார்தாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு
செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு
அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என்
முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.